1992 மார்ச் 12]

திரு. நடேசன் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள், இதேபோல் பல பகுதிகளில் பல ஆண்டுகளாக, ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநோயாளிகள் வந்து செல்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன, அவைகளை எல்லாம் எந்த இலக்கின் அடிப்படையில் 'அப்-கிரேட்' செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களிடம் இருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது, இக்கேள்விக்கு உரிய துணைக் கேள்வியாக இருக்காது. அடுத்து, வினா எண் 183. திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

183—

ஆலங்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக்கழகப் பணிமனை.

*4799—திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு நீண்ட நாட்களாகியும், பணிமனை அமைக்கப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஆலங்குடியில் பணிமனை ஒன்று அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டபின் பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால், மருதுபாண்டியர் பணிமனை விரைவிலே அமைக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 12

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கக்கூடிய ஆற்றல்மிக்க முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வருகிற ஆண்டிலே நிறைவேற்றித் தரப்படும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 184, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

184—

ஸ்ரீபெரும்புதூருக்கு தனிப்பேருந்துகள்.

*5923—திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அமரர் ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடமான ஸ்ரீபெரும்புதூருக்கு சென்னையிலிருந்தும், வேலூரிலிருந்தும் மற்ற மாவட்டத் தலைநகர்களிலிருந்தும், தனிப்பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முன்னாள் பாரதப் பிரதமரும், பாரத ரத்னாவாக இருந்த எங்கள் இதய தெய்வம் ராஜீவ் காந்தி அவர்கள் இறந்த ஸ்ரீபெரும்புதூருக்கு பலதரப்பட்ட இலட்சக் கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அன்றாடம் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். ஆனால், அந்த இடத்தில் பஸ் நிற்காத காரணத்தினால் அவர்கள் அல்லலுக்கு ஆட்படுகிறார்கள். அதை கருத்தில் கொண்டு சென்னையில் இருந்தும் மாவட்ட தலைநகரங்களிலிருந்தும் செல்கின்ற பஸ்கள் நிற்பதற்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், எதையும் நினைத்ததை சாதிக்கக்கூடிய வல்லமை படைத்தவர், இதையும் செய்து முடிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS